நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்
முன்னிலை : செல்வி. G.பவித்ரா, L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்கரன்கோவில்.
நீதித்துறை நடுவர், சங்கரன்கோவில் (மு.கூ.பொ)
2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 17-ம் தேதி திங்கள் கிழமை

M.P.No. 2/2025

in

C.C.No. 572/2025

கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலைய குற்ற எண். 186/2022

மனு நாள் 10.11.2025 பிரிவு 457 சி.ஆர்.பி.சி.

பாலகிருஷ்ணன்,
த/பெ. ராமையா

.....மனுதாரர் / வாகன உரிமையாளர்

/எதிர்/

காவல்துறை உதவி ஆய்வாளர்,
கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையம் ..... எதிர்மனுதாரர் / குற்ற முறையீட்டாளர்

மனு மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அரசு தரப்பில் பதில் பெறப்பட்டது.

மனுதாரர் தரப்பில், எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் மேற்படி காவல் நிலைய குற்ற எண். 186/2022 இ.த.ச. பிரிவு 379 (Sand theft)-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு, மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர் கைப்பற்றப்பட்ட டிரைலர் கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக வெயிலிலும், மழையிலும் எந்தவித பாதுகாப்புமின்றி நீதிமன்ற காவலில் இருந்து வருகிறது என்றும், மேற்படி எதிர்மனுதாரரால் கைப்பற்றப்பட்டு நீதிமன்ற காவலில் உள்ள மனுதாரருக்குச் சொந்தமான டிரைலர் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது என்றும், மேற்படி டிரைலர் எந்தவித பராமரிப்புமின்றி வெயிலிலும், மழையிலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் மேற்படி டிரைலர் சேதமடைந்து பயன்படுத்த முடியாத நிலைக்கு உட்பட்டுவிடும் என்றும், மேற்படி டிரைலர் மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்றும், TN 76 W 5637 என்ற எண் கொண்ட டிரைலர் உரிமையாளரான மனுதாரரிடம் ஒப்படைக்காவிட்டால் ஈடுசெய்ய முடியாத மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும் என்பதாலும், நீதிமன்றம் மனுதாரர் வசம் ஒப்படைக்கும்பட்சத்தில் நீதிமன்றம் பிறப்பிக்கும் நிபந்தனைக்கு உட்பட்டு நடப்பதாகவும், எனவே, மேற்படி வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைவு செய்ய வேண்டி வாதிடப்பட்டது.

எதிர்மனுதாரர்/அரசு தரப்பில், மேற்படி வழக்கானது புலன் விசாரணையில் இருந்து வருவதாலும், இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்தான கைப்பற்றப்பட்ட TN 76 W 5637 என்ற எண் கொண்ட டிரைலரானது சமூகம் நீதிமன்றத்தில் பி.ஆர்.எண். 555/2022 பிரகாரம் ரிமாண்ட் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவு பிரகாரம் காவல் நிலைய பொறுப்பில் உள்ளதாலும், மேற்படி வாகனத்தை மனுதாரரிடம் கொடுக்கும்பட்சத்தில் உருமாற்றம் செய்யவோ, விற்பனை செய்யவோகூடும் என்றும், இதுபோன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுத்தக்கூடும் என்பதாலும், மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட TN 76 W 5637 என்ற எண் கொண்ட டிரைலருக்கு முன்வழக்கு ஏதுமில்லை என்றும், இதனால் நீதிமன்ற விசாரணை பாதிப்படையும் என்பதால் மனுதாரருக்கு மேற்படி வாகனத்தை கொடுக்க கடுமையான ஆட்சேபணை தெரிவிப்பதாக எடுத்துரைக்கப்பட்டது.

இரு தரப்பும் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. பி.ஆர்.எண். *555/2022*-ல் கண்ட சொத்தான *TN 76 W 5637* என்ற எண் கொண்ட டிரைலர் மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்பதை எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபிக்கவில்லை என்பதைக் கருத்தில் கொண்டும், அதற்கான ஆவணங்களை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்திருப்பதாலும், மேற்படி வாகனம் நீதிமன்ற காவலில் இயக்கப்படாமல் இருந்தால் பழுதாகிவிடும் என்று மனுதாரர் வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இருப்பதாலும், மேற்படி வாகனத்தை கீழ்க்கண்ட நிபந்தனையின் பேரில் மனுதாரரிடம் இடைக்காலமாக ஒப்படைக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

நிபந்தனைகள் *:*

1. மனுதாரர் தானும், தனக்காக இரு நபர்களும் தலா ரூ.*40,000/-*க்கு பிணைமுறி எழுதிக் கொடுக்க வேண்டும்.
2. வாகனத்தின் அசல் ஆர்.சி.புத்தகத்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும்.
3. வாகனத்தை விற்கவோ, உருமாற்றம் செய்யவோ கூடாது.
4. நீதிமன்றம் உத்தரவிடும் நாளிலும், விசாரணையின்போதும் வாகனத்தை தவறாது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும்.
5. பறிமுதல் நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுக்கும்பொருட்டு வாகனத்தை கோரும்போது அதை ஆஜர்படுத்துவதாக தெரிவித்து மனுதாரர் பொறுப்பேற்பு கடிதம் *(Letter of undertaking)* எழுதிக் கொடுக்க வேண்டும்.
6. வாகனத்தின் நான்கு புறங்களையும் புகைப்படம் எடுத்து புகைப்படத்தையும் அதற்கான சி.டியையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.
7. பஞ்சநாமா தயாரித்து வழக்கு கோப்புடன் இணைத்து வைக்க வேண்டும்.

ஷை நிபந்தனைகளின் கீழ் பி.ஆர்.எண்.*555/2022*-ல் கண்ட *TN 76 W 5637* என்ற எண் கொண்ட டிரைலரை மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைவு செய்து உத்தரவிடப்படுகிறது.

PAVITHRA G

Digitally signed by PAVITHRA G
Date: 2025.11.17 18:13:54 +0300

நீதித்துறை நடுவர், *(*மு.கூ.பொ*)*,
சங்கரன்கோவில்.